**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **26/2015** |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ராமகிருஷ்ணன் | CASTE | : | |
| S/O | நாகரத்தினம் | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.02.2026**

**<u>7 முதல் 14, 16 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் 45 வருடங்களாக சோழவந்தானில் வசித்து வருகிறேன். நான் சாட்சி அளிக்க வருமாறு அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் வாதிக்கு ஆதரவாக கோயில்சொத்து கோவிலுக்கே கிடைக்கவேண்டும் என்று சாட்சி அளிக்க வந்துள்ளேன். வழக்குக்கோவில் தற்போது அரசு கட்டுப்பாட்டில் உள்ளது. எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து சுமார் 45 வருடங்கள் வாதி கோவில் ட்ரஸ்டின் பரம்பரை அறங்காவலர். வாதி பரம்பரை அறங்காவலர் என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். அந்த ஆவணங்கள் என்ன என்று தெரியாது.

2. வாதி கோவிலுக்கு 12 அல்லது 13 பேர் அறங்காவலராக உள்ளார்கள். மேற்படி அறங்காவலர்கள் அனைவரும் இந்த வழக்கில் தரப்பினராக உள்ளார்கள். அவர்களின் பெயர்கள் திருப்பதி, ராமமூர்த்தி, குருவாயூர், மற்ற பெயர்கள் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி நபர்கள் வழக்கில் தரப்பினர்களாக இல்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து கோவிலுக்கு ஒப்படைக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குச்சொத்தின் சர்வே எண் 811/31, அது கோவிலின் மேற்குப்பக்கம் உள்ளது.

3. வழக்குச்சொத்து கோவிலின் மேற்குப்புற காம்பவுண்டுக்கு அடுத்து உள்ளதா என்றால் சரிதான், காம்பவுண்ட் சுவரை ஒட்டி உள்ளது. வழக்குச்சொத்தில் நகைக்கடை உள்ளது, அதன் பெயர் எனக்குத்தெரியாது. கோவிலில் மொத்தம் 12 தெய்வங்கள் உள்ளன. கோவிலைச்சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் அரையும்குறையுமாக உள்ளது. காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றாலும் அதற்கு

வெளியேதான் நகைக்கடை உள்ளது என்றாலும் காம்பவுண்ட் சுவருக்கும் நகைக்கடைக்கும் இடையே கோவில் நிர்வாகத்தால் சுவர் கட்டப்பட்டுள்ளது.

4. வழக்குச்சொத்து தற்சமயம் கோவிலுக்கு பாத்தியப்பட்டது. வழக்குச்சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் தனிநபருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் உள்ளது தவறு என்றாலும் வழக்குச்சொத்து கோவில் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே உள்ளது என்றாலும் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அரசு தரப்பில் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் வழக்குப்பற்றி தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.